SPARKLE TOTS
PAP COMMUNITY FOUNDATION

# வாசிப்பின் மகிழ்ச்சி 2024



## பாலர்வகுப்பு 1 & 2





# கனிவன்புக் குடுவை



பல்வேறு கனிவன்பான செயல்களின் மூலம் நாம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். கனிவன்புக் குடுவையின் மூலம், மற்றவர்களுக்கு உதவுவது தங்களைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையில் எவ்வாறு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைப் பிள்ளைகள் உணர்வார்கள்.

## தேவையானவை:

- குடுவை அல்லது சிறிய கொள்கலன்
- சிறிய காகிதச் சீட்டுகள்
- வண்ண பேனாக்கள் (மார்க்கர்) அல்லது வண்ண எழுதுகோல்கள்

## பிள்ளையுடன் நீங்கள் என்ன செய்யலாம்:

1. வீட்டில், பள்ளியில் அல்லது உங்கள் சமூகத்தில் செய்யக்கூடிய கனிவன்பான செயல்களை உங்கள் பிள்ளையுடன் கலந்து ஆலோசியுங்கள்.
2. ஒவ்வொரு யோசனையையும் ஒரு துண்டு சீட்டில் எழுதுங்கள்.
3. சீட்டுகளை மடித்துக் கனிவன்பு குடுவைக்குள் போடவும்.
4. தினமும் குடிவையிலிருந்து ஒரு சீட்டை தவறாமல் எடுத்து அதில் எழுதப்பட்ட கனிவன்பான செயலைச் செய்ய உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கவும்.

## என்ன கற்றுக்கொள்கிறோம்:

- மற்றவர்களிடம் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சிறிய செயல்களை அடையாளம் காணுதல்.
- அக்கறையுள்ள சமூகத்தை உருவாக்க பொறுப்புடன் இருப்பதன் முக்கியத்துவத்தை அறிதல்.

## பெற்றோர்களுக்கான குறிப்பு:

பிள்ளைகள் முன்மாதிரியின் மூலம் கற்கிறார்கள்! உங்கள் செயல்களின் மூலம் கனிவன்பையும் இரக்கத்தையும் காட்டி, மற்றவர்களுக்கு உதவுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள்.





# பாராட்டு அட்டைகள்



சமூகத்திற்குப் பங்களிப்பவர்களின் முயற்சிகளை அங்கீகரிக்கவும் பாராட்டவும், பிள்ளைகளை ஊக்குவிக்கவும். நன்றியுணர்வை வெளிப்படுத்த அவர்களுக்குக் கற்பித்தலின் மூலம் மற்றவர்களின் கடின உழைப்பின் முக்கியத்துவத்தை அங்கீகரித்துச் சமூகத்தை ஆதரித்துச் சேவை செய்யும் மக்களுடன் தொடர்புகொள்ளவும் மற்றும் மரியாதை உணர்வை வளர்க்கவும் உதவுகிறது.

## தேவையானவை:

- சிறிய அட்டைகள் / காகிதங்கள்
- எழுதுகோல்கள்
- வண்ண எழுதுகோல்கள்
-

## என்ன கற்றுக்கொள்கிறோம்:

- மற்றவர்கள் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சிறிய செயல்களை அடையாளம் காணுதல்.
- அக்கறையுள்ள சமூகத்தை உருவாக்குவதற்காக நன்றியை வெளிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அறிதல்.

## பிள்ளையுடன் நீங்கள் என்ன செய்யலாம்:

1. அத்தியாவசியப் பணியாளர்கள் மற்றும் அவர்கள் செய்யும் வேலைகள் பற்றிப் பிள்ளைகளிடம் கலந்துரையாடவும்.
2. அவர்களின் வேலைகளின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
3. அத்தியாவசியப் பணியாளர்களால் அவர்கள் எவ்வாறு பயனடைந்தார்கள் என்று உங்கள் பிள்ளையிடம் கேளுங்கள்.
4. நன்றியுணர்வு என்றால் என்ன என்பதை விளக்கி கடின உழைப்பை எவ்வாறு பாராட்டுவது என்றும் விவரிக்கவும்.
5. 'பாராட்டு' அட்டையை உருவாக்க அவர்களுக்கு வழிகாட்டுங்கள்.
6. அத்தியாவசியப் பணியாளர்களுக்குப் பாராட்டு அட்டையை நேரில் வழங்க உங்கள் பிள்ளையை ஊக்குவிக்கவும்.
7. பாராட்டு அட்டையைச் செய்யும் போது அவர்கள் எப்படி உணர்ந்தார்கள் என்று உங்கள் பிள்ளையிடம் கேளுங்கள்.

## பெற்றோர்களுக்கான குறிப்புகள்:

பிள்ளைகள் முன்மாதிரியின் மூலம் கற்கிறார்கள்! உங்கள் செயல்களின் மூலமும் உங்கள் குழந்தையுடன் ஒன்றாகப் பங்கேற்று, பாராட்டுதலின் முக்கியத்துவத்தைப் பற்றி உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள்.




